**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 450/2020 P.W. 1 / LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருஞானம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. கோவிந்தசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.08.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்பொழுது கருவாக்குறிச்சி தெற்கு தெருவில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ராஜதுரை எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 04.02.2020 ல் எனது தம்பி ராஜதுரை அவரது இருசக்கர வாகனத்தில் மன்னார்குடி வருவதற்காக தளிக்கோட்டை வழியாக வரும்போது கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு அருகே காலை 9.45 மணியளவில் வரும்போது 36 என்ற வழித்தட எண் கொண்ட பேருந்து வேகமாக வந்து ஒரே மோதாக வந்து ராஜதுரை மீது மோதியதில் அந்த இடத்திலேயே விழுந்து காயம் அதிகமாக இருந்தது.

2)காயம்பட்ட ராஜதுரையை கார் மூலம் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். மேற்படி சம்வத்தினத்தன்று வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் பெயர் விவரத்தை பின்னால் கேட்டு தெரிந்து கொண்டேன். அவரது பெயர் தர்மராஜ் . அவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பித்து ஓடி விட்டார். மீனாட்சி மருத்தவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கிசிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம். அங்கு பரிசோதித்த மருத்துவர் ராஜதுரை இற்நது விட்டதாக தகவல் தெரிவித்தார்கள்.

3) அங்கு நாங்கள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லாரி மருத்தவமனையில் இருக்கும்போது வடுவூர் போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

முக்குளம் தர்க்காஸ்க்கும், கருவாக்குறிச்சி காலனிக்கும் இடையே ஒரு 200 மீட்டர் தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரர் அடிப்பட்ட விவரம் நான் கேள்விப்பட்டதுதான். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரையானவர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் ஆம் தெரிந்த நபர்கள்தான். தஞ்சாவூரில் எனது சகோதரர் இறந்தவுடன் வடுவூர் வந்து புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி பட்டியல் சாட்சிகளை புகார் கொடுப்பதற்காக நான்தான் ஆள் இல்லாததால் உடன் அழைத்துச்சென்றேன் என்றால் சரிதான். நான் சொன்னதன் அடிப்படையில்தான் காயம்பட்ட விவரம் அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தம்பி இறந்ததால் இந்த வழக்கில் நான் புகார்தாரராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாகன விபத்தின் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 450/2020 P.W. 2 / LW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **குணசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கப்பன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.08.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்பொழுது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அசா 1 திருஞானத்தை எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன ராஜதுரையை எனக் தெரியும். 04.02.2020 ஆம் தேதி கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு சந்திக்கும் இடத்தில் நானும், அமர்சிங், மாசிலாமணி ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ராஜதுரை தளிக்கோட்டை செல்வதற்காக வடக்கு திசையில் இருந்து தெற்கு திசை நோக்கி தனது இருசக்கர வாகனத்தில் சென்றார்.

2) அப்போது ஒரு அரசுப்பேருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி கன்ட்ரோல் இல்லாமல் வந்து ராஜதுரை வந்த இருசக்கர வாகனத்தில் மோதியது. அவ்வாறு மோதியதில் ராஜதுரைக்கு பலத்த காயம் ஏற்பட்டது. சம்பவத்தன்று மேற்படி அரசுப்பேருந்தை இயக்கிய நபரை நான் பார்க்கவில்லை. அவர் தப்பித்து ஓடிவிட்டார். பின்னிட்டு அன்றை தினம் அரசுப்பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியது எட அன்னவாசலை சேர்ந்த தர்மராஜ் என்று தெரிந்து கொண்டேன். காயம்பட்ட ராஜதுரையை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு சிகிச்சக்காக கொண்டு சென்றார்கள்.

3) பின்னர் அங்கிரந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள். அங்கு சிகிச்சயைில் பலன்

இன்றி இறந்து விட்டார். இது சம்பந்தமாக அசா 1 கொடுத்த புகாரை போலீசார் என்னையும் விசாரித்தார்கள். நான் நடந்த விவரம் சொன்னேன். இறந்த ராஜதுரை உடலின் மீது வடுவூர் போலிசார் தஞ்சாவூர் மருத்துவக்கல்லாரி மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்தபோது நானும் உடன் இருந்தேன். ராஜதுரையின் இறப்பானது வாகனவிபத்தால்தான் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u> : <u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்</u> .**

**1)** நான் முதல் விசாரணையில் சொன்ன விஷயத்தைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாகனம் வந்த திசை பொருத்தும் ராஜதுரைக்கு ஏற்பட்ட காயம் குறித்தும்போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1,3,4 5 ஆகியோர்கள் ஒரே ஊரைச்சேர்ந்த உறவினர்கள் என்று சொன்னால் சரிதான்.

2) மேற்படி கீழ்மேல் ரோட்டில் வேகத்தடைகள் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. மேற்படி சம்பவ இடத்தில் வேகத்தடை உள்ளது என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் எ ன்றால் சரியல்ல. சத்தம் கேட்டு ஓடிப்போய் பார்த்தோம் அடிப்பட்டுகிடந்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். ராஜதுரை இறந்தது சம்பந்தமாக முதல் விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தொடர்புபடுத்தி தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜதுரையின் கவனமின்மை மறைக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 450/2020 P.W. 3 / LW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மாசிலாமணி** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. வீரப்பன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.08.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்பொழுது முக்குளம் தர்க்காசில் குடியிருந்து விவசாயவேலை செய்து வருகிறேன். அசா 1, 2 ஐ எனக்கு தெரியும். அசா 1ன் சகோதரர் ராஜதுரையை தெரியும். 04.02.2020 ஆம் தேதி காலை அ 9.45 மணியளவில் விவசாய வேலை சம்பந்தமாக நானும், குணசேகரன் , அமர்சிங் ஆகியோர்கள் கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு அருகே பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ராஜதுரை தனது இருசக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார்.

2) அப்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அரசுப்பேருந்து வேகமாக வந்து ராஜதுரை மீது மோதியது. அதில் ராஜதுரைக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னிட்டு விசாரிக்கும்போது அன்றைய தினம் அரசுப்பேருந்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் எட அன்னவாசலை சேர்ந்த தர்மராஜ் என்று தெரிந்து கொண்டேன். காயம்பட்ட ராஜதுரையை சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

3) சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார் . அவர் பிரேதத்தின் மீது வடுவூர் போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். அன்றைய தினம் அரசுப்பேருந்தை இயக்கியவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பித்து ஓடி விட்டார். அசா 1 கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்த விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்** .

1) சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நான்கு ரோட்டில் நான் கீழ்ப்புறமாக நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி தகவலை போலீசார் விசாரிக்கும்போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான்குரோட்டின் வடபுறம் தர்க்காஸ் சாலை என்று சொன்னால் சரிதான். டமார் என்று சத்தம் கேட்டது, நான் ஓடிப்போய் பார்த்தேன். ராஜதுரை அடிப்பட்டு கிடந்தார் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் முதன் முதலாக நான் அவரை பார்த்தபோது அவர் ரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி தகவலை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) போலீசார் சொன்னதன் அடிப்படையில்தான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான தகவல் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ராஜதுரை எனது உறவினர் என்பதால் அவருக்கு வாகன இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக முதல் விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தொடர்படுத்தி தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 450/2020 P.W. 4 / LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **அமர்சிங்க்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராமசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.08.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்பொழுது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அசா 1 திருஞானத்தை எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன ராஜதுரையை எனக்கு தெரியும். 04.02.2020 ஆம் தேதி காலை 9.30 – 10 மணியளவில் கருவாக்குறிச்சி காலனி எனது வீட்டுக்கு அருகாமையில் நானும், மாசிலாமணி , குணசேகரன் ஆகிய மூவரும் பேசிக்கொண்டு நின்று கொண்டிருந்தோம். அப்போது நான்குரோடு கிழக்கில் இருந்து அரசுப்பேருந்து பஸ் வடக்கில் இருந்து பைக்கில் வந்த ராஜதுரையை திடீரென்று மோதியது .

2) நான் சத்தம் கேட்டு பார்த்தேன். அப்போது ராஜதுரை அடிப்பட்டு பிரண்டு கிடந்தார். பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பஸ்ஸின் கன்டக்கடர், டிரைவர் இருவரும் இறங்கி தெற்கே ஓடிக்கொண்டிருந்தார்கள். அடிப்பட்ட நபரை பார்த்ததால் நான் டிரைவரை சரியாக அடையாம் காணவில்லை. காயம்பட்ட ராஜதுரையை சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போனோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்தவக்கல்லாரி மருத்துமனையில் கொண்டு போய் சேர்த்தோம்.

3) அங்கு அவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். அவர் பிரேதத்தின் மீது வடுவூர் போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள், நானும் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்** .

1) நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளில் இரண்டு நபர்கள் தெற்கு நோக்கி ஓடினார்கள் என்பதை நான் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லக்கூடிய நான்கு ரோடு என்று சொன்னால் சரிதான்.

2) தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லக்கூடிய ரோட்டில்தான் விபத்து ஏற்பட்டது என்ற செய்தியை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். வழக்கு விபத்தானது தளிக்கோட்டை - மன்னார்குடி சாலையில்தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். சத்தம் கேட்டதும் ஓடிப்போய் பார்த்தேன். ராஜதுரை அடிப்பட்டுக்கிடந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளனேன்ள என்றால் சரிதான்.

3) முதல் விசாரணையில் வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தொடர்படுத்தி வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக உருவாக்கிய வழக்கில் ராஜதுரையின் கவனமின்மை மறைத்து உண்மைக்கு புறம்பாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.